ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா₃ந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ ஹ்ருதி₃ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ வீற்றிருந்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வீற்றிருந்து ॥

எம்பிரானுடைய இருப்பைக் கண்டு இன்புறல்

‡ வீற்றிருந்தேழ் உலகும்⋆ தனிக்கோல் செல்ல வீவில் சீர்⋆
ஆற்றல் மிக்காளும் அம்மானை⋆ வெம்மா பிளந்தான் தன்னை⋆
போற்றியென்றே கைகள் ஆரத்⋆ தொழுது சொல் மாலைகள்⋆
ஏற்ற நோற்றேற்கு⋆ இனியென்ன குறை எழுமையுமே (1)

மைய கண்ணாள் மலர் மேல் உறைவாள்⋆ உறை மார்பினன்⋆
செய்ய கோலத் தடங்கண்ணன்⋆ விண்ணோர் பெருமான் தன்னை⋆
மொய்ய சொல்லால் இசைமாலைகள் ஏத்தி⋆ உள்ளப் பெற்றேன்⋆
வெய்ய நோய்கள் முழுதும்⋆ வியன் ஞாலத்து வீயவே (2)

வீவில் இன்பம்மிக⋆ எல்லை நிகழ்ந்த நம் அச்சுதன்⋆
வீவில் சீரன் மலர்க் கண்ணன்⋆ விண்ணோர் பெருமான் தன்னை⋆
வீவில் காலம் இசைமாலைகள் ஏத்தி⋆ மேவப்பெற்றேன்⋆
வீவில் இன்பம்மிக⋆ எல்லை நிகழ்ந்தனன் மேவியே (3)

மேவி நின்று தொழுவார்⋆ வினை போக மேவும் பிரான்⋆
தூவியம் புள்ளுடையான்⋆ அடல் ஆழி அம்மான் தன்னை
நாவியலால் இசை மாலைகள் ஏத்தி⋆ நண்ணப் பெற்றேன்⋆
ஆவி என்னாவியை⋆ யான் அறியேன் செய்த ஆற்றையே (4)

ஆற்ற நல்ல வகை காட்டும்⋆ அம்மானை⋆ அமரர் தம்
ஏற்றை⋆ எல்லாப் பொருளும் விரித்தானை எம்மான் தன்னை⋆
மாற்ற மாலை புனைந்தேத்தி⋆ நாளும் மகிழ்வெய்தினேன்⋆
காற்றின் முன்னம் கடுகி⋆ வினைநோய்கள் கரியவே (5)

கரிய மேனிமிசை⋆ வெளிய நீறு சிறிதே இடும்⋆
பெரிய கோலத் தடங்கண்ணன்⋆ விண்ணோர் பெருமான் தன்னை⋆
உரிய சொல்லால் இசைமாலைகள் ஏத்தி⋆ உள்ளப் பெற்றேற்கு⋆
அரியதுண்டோ எனக்கு⋆ இன்று தொட்டும் இனியென்றுமே (6)

www.prapatti.com

என்றும் ஒன்றாகி⋆ ஒத்தாரும் மிக்கார்களும்⋆ தன் தன-
க்கின்றி நின்றானை⋆ எல்லா உலகும் உடையான் தன்னை⋆
குன்றம் ஒன்றால் மழை காத்த பிரானைச்⋆ சொல் மாலைகள்⋆
நன்று சூட்டும் விதியெய்தினம்⋆ என்ன குறை நமக்கே (7)

நமக்கும் பூவின் மிசை நங்கைக்கும்⋆ இன்பனை⋆ ஞாலத்தார்
தமக்கும்⋆ வானத்தவர்க்கும் பெருமானை⋆ தண் தாமரை
சுமக்கும் பாதப் பெருமானைச்⋆ சொல் மாலைகள்⋆ சொல்லுமாறு
அமைக்க வல்லேற்கு⋆ இனி யாவர் நிகர் அகல் வானத்தே (8)

வானத்தும் வானத்துள் உம்பரும்⋆ மண்ணுள்ளும் மண்ணின் கீழ்த்
தானத்தும்⋆ எண் திசையும்⋆ தவிராது நின்றான் தன்னை⋆
கூனற்சங்கத் தடக்கையவனைக்⋆ குடம் ஆடியை வானக்
கோனைக்⋆ கவி சொல்ல வல்லேற்கு⋆ இனி மாறுண்டோ (9)

உண்டும் உமிழ்ந்தும் கடந்தும் இடந்தும்⋆ கிடந்தும் நின்றும்⋆
கொண்ட கோலத்தொடு வீற்றிருந்தும்⋆ மணம் கூடியும்⋆
கண்ட ஆற்றால்⋆ தனதே உலகென நின்றான் தன்னை⋆
வண் தமிழ் நூற்க நோற்றேன்⋆ அடியார்க்கின்ப மாரியே (10)

‡ மாரி மாறாத தண்ணம்மலை⋆ வேங்கடத்தண்ணலை⋆
வாரி மாறாத பைம் பூம் பொழில் சூழ்⋆ குருகூர் நகர்⋆
காரி மாறன் சடகோபன்⋆ சொல் ஆயிரத்திப்பத்தால்⋆
வேரி மாறாத பூமேல் இருப்பாள்⋆ வினை தீர்க்குமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com